# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 32 ஹிஜ்ரி 1439 ஜமாதுல் ஆஹிர் 2018

இலவசம்




# அங்கூலியா பள்ளிவாசல் புதுப்பிப்பு 2019ல் புதிய 4 மாடி பள்ளிவாசல்

உதவிக் கரம் நீட்டுங்கள்

விவரங்கள் உள்ளே...



# முயிஸ் 50-பொன்விழா

சிங்கப்பூர் முஸ்லிம் சமய மன்றமான முயிஸ், இந்த 2018ல் நமது சமூகத்துடன் ஒருங்கிணைந்து ஐம்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. பல சமய, சமூக, சிங்கப்பூரில் நாம் தொடர்ந்து முன்னேறுவதற்குரிய வழிமுறைகள் பற்றிய ஆய்வு, கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று முயிஸ் தெரிவித்துள்ளது. அவற்றில் பங்கேற்கும்படி சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தினருக்கு மன்றம் அழைப்பு விடுத்திருக்கிறது.

பிரடல் சாலையில் $6.9 மில்லியன் செலவில் பள்ளிவாசல் கல்வி நிலையத்துடன் முயிஸ் வளாகம் புதுப்பிக்கப்பட்டு 16.1.2009ல் திறப்பு விழா கண்டதை அறிவோம். மன்றத்தின் 40 ஆண்டு வரலாற்றை எடுத்துரைக்கும் நூல் 2009 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது. முயிஸ் 1968ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன் சமய, சமூக நற்பணிச் சாதனைகளை சிங்கப்பூரர்கள் நன்கறிவார்கள். பல பள்ளிவாசல்களைக் கட்டும் பணியில் முனைப்பாக அது ஈடுபட்டு வந்தது. அதற்காக 1975ல் பள்ளிவாசல் கட்டுமான நிதி தொடங்கப்பட்டது. அந்த நிதியின் மூலம் 129 மில்லியன் வெள்ளிக்கு மேற்பட்ட செலவில் 23 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன.

ஜகாத் உதவி வழங்கும் கடமையை முயிஸ் நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது. வசதிகுறைந்த குடும்பங்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது 2009ல் 631,500 வெள்ளி வழங்கப்பட்டது.



உன்னத சிங்கப்பூர் சமுதாயத்தை உருவாக்கும் ரிஸாலா-பத்து அம்சத் திட்டத்தை முயில் செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்தின் ஒரு பகுதியாக, 26 பள்ளிவாசல்களில் தமிழ் மொழியில் இஸ்லாமிய சமயக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் சிறப்பு அம்சங்களை விளக்கும் ரிஸாலா-உன்னதத்தை நோக்கி ஒரு பயணம் எனும் நூலையும் முயிஸ் வெளியிட்டது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப முயிஸ் செயல்பட்டு வந்திருக்கிறது. சமூக, பொருளாதார, கலாசார, கல்வி அம்சங்கள் ஆராயப்படும். சவாலான காலகட்டத்தில் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது அவசியம். அதற்குரிய நடைமுறைகளை வகுப்பது முயிஸின் கடமை. சிங்கப்பூர் முஸ்லிம்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பான தங்கள் எண்ணங்களை muis50@muis.gov.sg மின்னஞ்சல் மூலம் இஸ்லாமிய சமய மன்றத்திற்குத் தெரிவிக்கலாம்.




# இளைய தலைவர் - ஆக்கபூர்வ தொண்டூழியர்




தொண்டூழியர்களுக்கும் இளைய தலைவர்களுக்கும் மனிதாபிமான நற்பணித் திட்டத்தையும் முயிஸ் உருவாக்கியுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் இணைந்து, சமூக மேம்பாட்டுக்காகச் செயல்படும் திட்டம் இது. 36 இளைய தலைவர்களும், தொண்டூழியர்களும், ரஹ்மத்தன் லில் ஆலமீன் முதலான அமைப்புகளின், இரண்டு நாள் பயிலரங்கில் கலந்துகொண்டு, பயனடையும் திட்டம் இது. இப்பயிலரங்கு இவ்வாண்டு 27&28 ஜனவரியில் நடைபெற்றது.

கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்னாம் நாட்டவர்களும் இதில் பங்கேற்றார்கள்.

# சிங்கப்பூர் முஸ்லிம் நெறிமுறை

பெரியவர்களுக்கான இஸ்லாமிய கல்வித் திட்டத்தில் (ADIL) , சிங்கப்பூர் முஸ்லிமாகத் திகழும் வழிமுறைகளை எடுத்துரைக்கும் செயல் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

சிங்கப்பூரின் சமய, சமூக நல்லிணத்தை மேம்படுத்தும் இஸ்லாமியக் கோட்பாடுகளை அது விளக்கும். அத்திட்டம் அல் முக்மினின் பள்ளிவாசலில் (ஜூரோங் ஈஸ்ட்), 3.2.2018ல் அறிமுகப்படுத்தப்பட்டது. மார்ச் மாதம் முதல் எல்லா ADIL நிலையங்களிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.




www.muis.gov.sg/ie இணையத்தளத்தில் மேல் விவரங்களைப் படித்தறியலாம்.

# குர்ஆன் ஓதும் போட்டி

முயிஸ் தேசிய அளவில் குர்ஆன் ஓதும் போட்டியை 25.3.2018 அன்று நடத்துகிறது. முஸாபகாஹ் திலாவாஹ்-தஹ்ஃபிஸ் அல் குர்ஆன் (MTTQ) நிகழச்சி ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெற்று வருகிறது. அதன் மூலம் குர்ஆன் ஓதும் காரிகள் உருவாக்கப்படுகின்றனர். அத்தகைய திறமையாளர்களைத் தேர்வு செய்யும் போட்டி நிகழ்ச்சி, ஆர்க்கிட் கண்ட்ரி கிளப் வளாகத்தில், மார்ச் 25ஆம் நாள் நடைபெறும் என்று முயிஸ் அறிவித்துள்ளது.

# பள்ளிவாசல்களின் நற்பணி



சிங்கப்பூர் பள்ளிவாசல்கள் ஆற்றிவரும் அரும்பணிகளை நாம் அறிவோம். முயிஸ் தலைமை நிர்வாகி அப்துல் ரஸாக் மரைக்கார் தமது உரைகளில் அவற்றை விளக்கியிருக்கிறார். திறன் மிக்க இமாம்களை நாம் பெற்றிருப்பது அவசியம் என்று, முயில் அரங்கில், 20.1.20 அன்று, நடைபெற்ற 14 பள்ளிவாசல் மன் உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் கூறின இந்நிர்வாகக் குழுவினர்கள், 2018 ஜனவரி முதல் 31 அக்டோபர் 2020 வரை, மூன் ஆண்டுகளுக்குப் பணிபுரிவார்கள்.

அந்த 14 பள்ளிவாசல்களின் பட்டியலையும் அவர் வெளியிட்டார்.
அவை:
அல் அப்ரார், அல் அமீன், அல்ஃபலா
ஹாஜி முஹம்மது சாலிஹ் (பால்மர் சாலை)
பென்கூலன், புர்ஹானி, ஜாமியா சூலியா
ஜாமிக் குயின்ஸ்டவுன், ஜாமியா அர் ராபிதா
கம்போங் டெல்டா, மலபார்,
மௌலானா முஹம்மது அலி, முஜாஹிதீன்
உமர் கம்போங் மலாக்கா பள்ளிவாசல்கள் ஆகும்.



பென்கூலன்
பள்ளிவாசல்
நிர்வாகக் குழு

மௌலானா
முஹம்மது அலி
பள்ளிவாசல்
நிர்வாகக் குழு





அல் அப்ரார்
பள்ளிவாசல்
நிர்வாகக் குழு

அப்துல் கஃபூர்
பள்ளிவாசல்
நிர்வாகக் குழு





ஜாமியா சூலியா
பள்ளிவாசல்
நிர்வாகக் குழு

# ஹாஜி ஹஸன் குத்தூஸுக்கு ஜாஸா பக்தி விருது

முயிஸ், முஸ்லிம் பிரமுகர்களை சிறப்பிக்கும் ஜாஸா பக்தி, மற்றும் செமர்லாங் விருதுகளை ஆண்டுதோறும் வழங்கிவருவதை அறிவோம். சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின், முன்னாள் தலைவர், ஹாஜி ஹஸன் குத்தூஸ் ஜாஸா பக்தி விருது பெற்றுள்ளார். அதிபர் ஹலிமா யாக்கூப் 14.10.2017 அன்று இந்த விருதை வழங்கினார்.

அவருடைய சாதனைக்குரிய சிறப்பு அங்கீகாரம் இந்த விருது என்று சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் பாராட்டியது.



சிங்கப்பூர் முஸ்லிம்களின் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் ஐம்பது ஆண்டு காலம் அயராது பாடுபட்ட அவருக்கு வழங்கபட்ட இந்த விருது, தங்கள் சங்கத்துக்குரிய பெருமை என்று தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் தெரிவித்தது.

தபால் துறையில் சாதாரண ஊழியராக ஹஸன் குத்தூஸ் பணிபுரிந்து கொண்டிருந்த போதே பல முற்போக்கான இலட்சியங்களும் செயல் திட்டங்களும் உருவெடுத்தன. சமுதாய முன்னேற்றமே அவருடைய இலக்காக இருந்தது.

பல கருத்தரங்குளில் கலந்து கொண்ட



ஹஸன் குத்தூஸ், கல்வி மேம்பாட்டை தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்டார். சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் சமூகம் நன்னிலைக்கு வர, கல்வித் திறன் அவசியம் என்பதற்கு அவர் முன்னுதாரணமாக அமைந்தார். அதற்கு எடுத்துக்காட்டாக தமது மூன்று பிள்ளைகளும் முறையான கல்வி கற்க வழிவகுத்து பட்டதாரிகளாக்கினார்.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் வளர்ச்சிக்கும் நற்பணிகளுக்கும் ஹாஜி ஹஸன் குத்தூஸ் ஆற்றிய பங்களிப்பை மூத்த தலைமுறையினர் நன்கு அறிவார்கள். அதற்குரிய அங்கீகாரமே 2017 ஜாஸா பக்தி விருது.

## நபி மொழி

### நல்வாழ்வுக் கட்டளை

“ஆண்களாயினும் பெண்களாயினும் ஒருவர் மற்றவரை பரிகாசம் செய்யக்கூடாது. பழித்துப் பேசக்கூடாது. ஏனென்றால், மேலானவர்களாகத் தங்களை நினைத்துக் கொண்டு பரிகாசமும் ஏளனமும் புரிவோர் தாங்களாகவே தாழ்ந்து போகக்கூடும். இறைவன் அவர்களைத் தாழ்த்தி வீடுவான். விசுவாசிகள் அத்தகைய செயலில் ஈடுபடக்கூடாது. அது பாவச்செயல் ஆகையால், அக்கிரமம் புரிந்தவர்களாக அவர்கள் ஆகிவிடுகின்றனர். இறை நம்பிக்கையுடையவர்கள் இன்னொருவரை இழித்தும், பழித்தும் பேசக்கூடாது” என்பது இறைவனின் ஆணை. இதுவே நபி பெருமானின் நல்வாழ்வுக் கட்டளை.



# சி.தெ.மு.ந.ச. குடும்ப தின விழா




கடந்த 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9:00மணி முதல் மாலை 5:00 மணிவரை, சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் (சி.தெ.மு.ந.ச.) ஏற்பாட்டில், குடும்ப தின நிகழ்ச்சி, பாசிர் ரிஸ் கடற்கரைப்பூங்காவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 500 நபர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், அனைவருக்கும் காலை, மதியம் உணவு மற்றும் தேனீர் விருந்தும், மிகச்சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

மேலும், குடும்பங்களுக்கு மத்தியில் நல்ல இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், குடும்பம் குடும்பமாக பங்கேற்க்கும் விதத்தில், பல விளையாட்டுப்போட்டிகள், நடத்தப்பட்டு, பரிசுகள், வழங்கப்பட்டது. அத்தோடு, குழந்தைகளை கவரும் விதத்தில் அவர்களுக்கு ஏற்ற விளையாட்டுகள், மற்றும் ஐஸ்கிரீம், கடலை வகைகள், மெகந்தி போன்ற பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கலந்து கொண்ட அனைவருக்கும் நினைவு பரிசுகளும், அதிர்ஷ்ட குலுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிகள் அனைத்தையும் பொறுப் பேற்று, மிகச்சிறப்பாக நடத்திய சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களான, ஜனாப் முஹம்மது ஆரிஃப் மற்றும் உமருல் ஃபாருக் ஆகியோருக்கு சங்கத்தின் தலைவர் ஹாஜி அசன் மசூத், செயலாளர் மஞ்சா இஸ்ஹாக், துணைத்தலைவர் ஹாஜி முஹம்மத் ஜாஃபர் ஆகியோர் நன்றி தெரிவித்து, சங்கத்தின் உஸ்தாத் அசன் அலி அவர்களின் துஆவோடு, இனிமையாக முடிந்தது.



# மாதர்களின் சமூக இலக்கியப் பணி

## நஸ்ரத் ஹஸன்



பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்து நற்பணியாற்ற வேண்டும்! இதற்கு எடுத்துக் காட்டாக, முன்னுதாரணமானத் திகழ்கிறார் நஸ்ரத் ஹஸன்.

நாமும் உயர வேண்டும் நமது சமூகமும் உயர வேண்டும்! இந்தப் பரந்த நோக்கத்துடன், பரோபகாரச் சிந்தனையுடன் செயலாற்றி வரும் ஒரு மாதர் மணி இவர்.

சமூகத்திடமிருந்து நாம் பெற்ற உதவியை சமூகத்திற்கு திரும்ப வழங்குவது நமது கடமை. அப்படி வழங்கும் ஒவ்வொரு தருணமும் நமக்கு மகிழ்ச்சியைத் தரும். அதுவே நமது நடைமுறையாக அமைய வேண்டும், என்கிறார் அரசுத் துறை ஊழியரான நஸ்ரத் ஹஸன்.

“இன்று நலமாகவும் வளமாகவும் வாழ்பவர்கள் கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. எங்கள் குடும்பம் பல இன்னல்களைக் கடந்து வந்திருப்பதை அறிந்திருப்பதால், அன்றாட வாழ்க்கைக்குச் சிரமப்படும் நிலையில் உள்ளவர்களுக்கு நான் உதவ முன்வந்தேன். நல்ல தொண்டூழியமாக அதைக் கருதுகிறேன்” என்று கூறுகிறார் இவர்.

நல்ல தமிழ் பேசும் நஸ்ரத் ஹஸன், தனது குரல் வளத்தால் சிறந்த செய்திவாசிப்பாளர் என்ற பெருமையைப் பெற்றார். சிங்கப்பூர் தொலைக்காட்சிக் கழகத்தில் குறுகிய காலமே பணிபுரிந்தாலும் ‘எதிரொலி’ போன்ற நல்ல நிகழ்ச்சிகளைத் திறம்பட வழங்கினார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான இவர் தகவல், தொடர்புத் துறை அமைச்சில் பணியாற்றச் சென்றார்.

நமது நல்ல மரபுகளை நாம் பின்பற்ற வேண்டும் என்று கூறும் நஸ்ரத் ஹஸன் நலிந்தவர்களின் வாழ்வில் நலம் சேர்க்க அடக்கமாகப் பணியாற்றிவருகிறார். குடும்பம் தொழில் என்பதோடு நின்றுவிடாமல், இயன்றவரையில் சமூகத்திற்கு உதவிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் செயல்படுகிறார் நஸ்ரத் ஹஸன். தமிழ் முஸ்லிம் மாதர்கள் பின்பற்றி நடக்கக் கூடிய நல்ல குணவியல்புகளை இயற்கையாகவே பெற்று சேவையாற்றி வருகிறார் நஸ்ரத் ஹஸன்.

## ஹாஜரா பீவி



சமய, சமூக நற்பணிகளில் சாதனை புரிந்துவரும் மாதர்களை அறிவோம். வணிகத் துறையில் முன்னணித் தடம் பதித்து, பிரபலமான சொத்து முகவராகத் திகழ்கிறார் ஹாஜரா பீவி.

தெளிவான முற்போக்குச் சிந்தனையிருந்தால் எதையும் சாதிக்கலாம், புதிய இலக்குகளை வகுத்துக் கொள்வது அதற்கு அவசியம் என்பது இவருடைய கருத்து. அனுபவங்கள் உயர்வுக்கு ஆதாரம் என்பதையும் உணர்த்துகிறார் ஹாஜரா பீவி.

சொத்து முகவர் தொழிலுக்கு வருவதற்கு முன் மருத்துவ சாதனங்களை விற்பனை செய்யும் அதிகாரியாக இவர் இருந்தார். அப்போது மனித உறவுமுறைகள் பற்றி ஆழ அகலமாக அறிந்து கொண்டார். அதன் விளைவாக மனித உறவுகள் சார்ந்த பயிற்சி வகுப்பில் சேர்ந்து டிப்ளோமா கல்வி பெற்றார். அந்தக் கல்வித் தகுதியே சொத்து முகவராகப் பொறுப்பேற்பதற்கு பெரிதும் உதவியதாகக் கூறுகிறார் ஹாஜரா. அதைத் தொடர்ந்து சொத்து முகவருக்கான மேற்படிப்பையும் முடித்தார்.

தமது வருமானத்தின் கால் பகுதியை வசதியில்லாத ஏழை எளிய மக்களுக்கு உதவியாக வழங்கி வருகிறார். அதனால் தான தர்மம் அளிக்கும் தயாள குணமுடைய சமூக சேவகி என ஹாஜரா பாராட்டப்படுகிறார்.

2009ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலான காலத்திற்குரிய தலைசிறந்த பெண் சொத்து முகவராக ஹாஜரா தேர்ந்தெடுக்கப் பட்டார். சிறந்த தொழில் நுட்பங்களை தமக்குக் கற்றுத் தந்தவர்களை மறக்க முடியாது என்று கூறுகிறார். அவர்களில் ஒருவர் புரோப்னெக்ஸ் நிறுவனத்தின் முகவர் முஹம்மது இஸ்மாயில் என்று நன்றி பாராட்டுகிறார்.



58 வயதினரான ஹாஜரா பீவி தமது குடும்பப் பாங்கை பெருமிதத்துடன் விவரிக்கிறார். தாயார் ஆசிரியர் பீவியின் கடின உழைப்பே பெரும் உந்துசக்தியாக அமைந்ததாகக் கூறும் இவருடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஒன்பது பேர். இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

வாடகை வீட்டில் வசித்த வசதி குறைந்த குடும்பத்தினர், சொந்த வீடுகளைப் பெற அயராது பாடுபட்டவர் என பாராட்டப் படுகிறார் ஹாஜரா. பல சிரமங்களைச் சமாளித்து சிறந்த கல்வி பயின்று முன்னுதாரணமான தொழில் முனைவராகத் திகழ்கிறார் ஹாஜரா.

## மும்தாஜ் உஸேன்



சிங்கப்பூரில் வெளிநாட்டுப் பணிப் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதை அறிவோம். அவர்களுக்கு வேலை தேடித்தரும் பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றை சிறப்பாக இயக்கிவரும் நமது முஸ்லிம் மாதரசிதான் மும்தாஜ் உஸேன்.

கடின உழைப்பாளியாக மதிக்கப்படும் இவர், சக ஊழியர்களால் வெகுவாகப் பாராட்டப்படுகிறார். அனுபவத் திறனே இதற்கு ஆதாரம். மும்தாஜ் உஸேன் 1988ஆம் ஆண்டில் ஒன் ஆசியா நிறுவனத்தின் எழுத்தராகச் சேர்ந்து படிப்படியாக தொழில் திறனை வளர்த்துக் கொண்டார். தற்போது மும்தாஜ், நிறுவனத்தின் பொறுப்பதிகாரியாகப் பதவி வகிக்கிறார்.

இளம் வயதில் இவருக்குக் கல்வி ஆர்வம் அதிகமாக இருந்தது. ஆனால், குடும்பச் சூழல் காரணமாக பள்ளிப் படிப்பைப் பத்தாம் வகுப்போடு முடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. வெளிநாட்டுப் பணிப்பெண் துறையில் டிப்ளமோ பெற்றிருக்கும் மும்தாஜ் உஸேன், இந்தத் துறையில் சிறப்புத் தகுதிபெறும் விருப்பத்தில் பட்டக் கல்வி பயில விரும்புகிறார்.

நான்கு பிள்ளைகளுக்குத் தாயான மும்தாஜ் உஸேன், சேவை மனப்பான்மை மிக்கவர். அறப்பணிகளுக்கு அவ்வப்போது நிதியுதவி வழங்கி வருகிறார். சுனாமி பேரிடரின் போது, உறவினர்களிடமும் நண்பர்களிடமும் நிதி திரட்டி, ஆதரவற்ற நிலையில் இருந்த இந்திய, இலங்கை அகதிகளுக்கு உதவி வழங்கினார்.

நீண்ட காலமாகப் பொதுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மும்தாஜ் உஸேன், வசதியற்ற ஏழை எளிய மாணவர்களுக்கும், இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்.

இவருடைய கணவர் முஹம்மது உஸேன் ஒரு தனியார் நிறுவனத்தின் மேற்பார்வையாளராக இருக்கிறார். மும்தாஜ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவி வருகிறார்.

தமது நிறுவனத்தை தலைசிறந்த பணிப்பெண் நிறுவனமாக உயர்த்துவதே இலக்கு என்ற மனவுறுதியுடன் செயல்பட்டு வருகிறார் மும்தாஜ் உஸேன்.

# இஸ்லாமிய தமிழ் பேருரை நூறாவது நாள் விழா

சிங்கப்பூர் பீச் ரோட்டில் அமைந்துள்ள ஹாஜ்ஜா பாத்திமா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவும், சிங்கப்பூர் ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கமும் இணைந்து நடத்தி வரும் மாதாந்திர சொற்பொழிவுகளின் நூறாவது நாள் நிறைவு விழா கடந்த 28.1.2018ல் இனிதே நடந்தேறியது.

ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில், நம் உள்ளூர் உலமா பெருமக்கள் இணைந்து இஸ்லாமிய தமிழ் சொற்பொழிவினை ஆற்றி வருகிறார்கள். அதில் மதரஸாவின் மாணவ-மாணவியரும் பங்கேற்று சொற்பொழிவு ஆற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



நூறாவது நாள் நிறைவு விழாவில் சமூகத் தலைவர்கள் பலரும் ஜமாஅத் தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சொற்பொழிவு ஆற்றிய உலமாக்களுக்கும் மாணவ - மாணவியருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

# அங்கூலியா பள்ளிவாசல் புதுப்பிப்பு



சிங்கப்பூரின் நினைவுச் சின்னங்களில் ஒன்றான சிராங்கூன் சாலை அங்கூலியா பள்ளிவாசல், நான்கு மாடிக் கட்டடமாகப் புதுப்பிக்கப் படவிருக்கிறது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த அங்கோலி பகுதியிலிருந்து சிங்கப்பூருக்கு வந்த முஸ்லிம்கள், 1890ஆம் ஆண்டில் தானமாகப் பெற்ற இடத்தை தொழுகைக் கூடமாக்கினர். பிறகு கட்டம் கட்டமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

128 ஆண்டு பழமை வாய்ந்த இப்பள்ளிவாசலுக்கு ஐந்து நேரத் தொழுகைக்கு வருவோர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்ததால், கூடுதல் இடவசதியுடன் 1970ல் அங்கூலியா பள்ளிவாசல் கட்டப்பட்டது.

இன்றைய தேவைக்கு ஏற்றவாறு பள்ளிவாசலை சீரமைக்க வேண்டிய அவசரத் தேவையைப் பற்றி பள்ளிவாசல் நிர்வாகக் குழு முயிஸ் மன்றத்துடன் 2012 ஆண்டில் பேச்சு நடத்தியது. பள்ளிவாசலைப் பதுப்பித்துக் கட்டுவதற்கு 2014ல் அங்கீகாரம் கிடைத்தது. அப்பணிக்கு 10.5 மில்லியன் வெள்ளி தேவை என்றும் மதிப்பிடப்பட்டது.



நிதி திரட்டும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளை 18 மாதங்களில் நிறைவு செய்வது திட்டம். அதன்படி 2019 தொடக்கத்தில் நான்கு மாடி அங்கூலியா பள்ளி வாசல் கட்டிமுடிக்கப்படும். மூன்று மாடிகளில் அனைவரும் தொழுவதற்கு தாராள இடவசதி இருக்கும். ஒரே நேரத்தில் இங்கு 2,500 பேர் தொழுதுக் கொள்ளலாம்.

பள்ளிவாசலின் மறுநிர்மாணப் பணி தொடங்கப் படுவதால், 23.2.2018 அன்று கடைசி ஜும்மா தொழுகை நடைபெற்றது. அதில் அமைச்சர் யாக்கூப் இபராஹிம், முயிஸ் தலைமை நிர்வாகி அப்துல் ரஸாக் மரைக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர். அஸர் தொழுகைக்குப் பிறகு பள்ளிவாசல் தற்காலிகமாக மூடப்பட்டது.

அங்கூலியா பள்ளிவாசலின் மறுநிர்மாணப் பணிகளுக்கு நன்கொடை வழங்குவதற்கான 5 வழிமுறைகளும் வெளியிடப் பட்டுள்ளன. காசோலை, நேரடி உதவித் தொகை, நேரடியாக வீடுதேடி வந்து தொகையைப் பெறுவது ஆகியவை அவற்றில் அடங்கும். மேல் விவரங்களுக்கு http://www.angulliamosque.com.sg/donations-and-infaq நாடுங்கள்.



**அல்லாஹ்வுக்காகப் ஒரு பள்ளிவாசலை யார் கட்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் சொர்க்கத்தில் அதைப் போன்ற ஒரு வீட்டைக் கட்டுகிறான்.**
**- நபிமொழி**



# சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அறக்கட்டளை (பரக்கத் நிதி) துவக்கம்




சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் கல்வி, பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவக்கூடிய அறக்கட்டளை ஒன்று சிங்கப்பூரில் நிறுவப்பட்டுள்ளது. "பரக்கத் நிதி" எனும் இந்த அறக்கட்டளை நிதியை, உள்துறை, சட்ட அமைச்சர் க.சண்முகம் 24.9.2017 அன்று அதிகாரபூர்வமாகத் துவக்கி வைத்தார்.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்கள் வளர்ச்சிப்பாதையை நோக்கி சரியான இலக்குடன் பயணமாவதை இந்நிகழ்ச்சியும், பரக்கத் நிதியின் துவக்கமும் காட்டுவதாக அமைச்சர் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார். நிகழ்ச்சி சரியான நேரத்தில் துவங்கி இருப்பதும், பெருந்திரளான மக்கள் தொடக்க விழாவிற்கு வருகை தந்திருப்பதும் தமக்கு பெருமகிழ்வைத் தந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். நல்ல நோக்கத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் இந்த நிதிக்கு எல்லோரும், தாராள மனத்துடன் உதவ வேண்டும் என்றும் அமைச்சர் சண்முகம் கேட்டுக்கொண்டார்.

சமூகத் தலைவர்கள், வணிகர்கள் உட்பட, 1,300 பேர் திரண்டிருந்த விழாவில், உரை நிகழ்த்திய அமைச்சர், இளையர்களின் போதைப் பொருள் புழக்கம் ஒரு கவலை தரும் அம்சம் என்றும், இந்த விஷயத்தில் தமிழ் முஸ்லிம்கள் அக்கறை காட்டுவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.




பல வணிகர்களும், சமூகத் தலைவர்களும் விழாவில் கலந்து கொண்டு, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையை பரக்கத் நிதிக்கு நன்கொடையாக வழங்கி, நிதி மேலும் பெருகிட ஊக்கமளித்தனர். இவ்விழாவின் மேலும் ஒரு முக்கிய அம்சமாக "வளர்பிறை" என்னும் தலைப்பிலான இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், ஆன்மீக அருள் இசைமுரசு அபுபரக்கத், ஏல்டெல் சூப்பர் பாடகி பரிதா ஆகியோர் இஸ்லாமிய இன்னிசை வழங்கி இரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.






வறியோருக்கும்,வாய்ப்பு வசதியற்றோருக்கும்,முதியோருக்கும், உயர்கல்வி பெற இயலாமல் தவிப்போர்க்கும் உதவிக்கரம் நீட்டும் பரக்கத் நிதிக்கு உதவ விரும்புவோர், இதன் நிறுவனர், மு.அ.மசூதுடன், 97958142 எண்ணில் தொடர்பு கொள்ளலாம். நன்கொடை அனைத்திற்கும் வரிக்கழிவு உண்டு.

# மரபுடைமை நிலையம் நாகூர் தர்கா கந்தூரி விழா



நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையத்தின் 2018 மவ்லூது நிகழ்ச்சிகள் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சிறப்பாக நடைபெற்றன.

அதன்படி நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகரின் நினைவாக பிப்ரவரி 16 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மவ்லூது தொடங்கப்பட்டது. அருகிலுள்ள அல்அப்ரார் பள்ளிவாசலில் மக்ரிப் தொழுகையை முடித்து வந்ததும், 7:45க்கு சிறப்பு துவா ஓதப்பட்டு கொடியேற்றப்பட்டது. தர்கா நிர்வாகக் குழுவின் தலைவர்களும் உறுப்பினர்களும் இணைந்து இரவு எட்டு மணிக்கு கொடியை ஏற்றி வைத்தார்கள். அதற்குப் பிறகு அனைவருக்கும் தப்ரூக் வினியோகிக்கப்பட்டது.



அடுத்த நிகழ்ச்சியாக மார்ச் 4ஆம் தேதி மவ்லூது நடைபெறும் என்று தர்கா நிர்வாகக் குழுவின் செயலாளர் ஹாஜி நசீர் கனி தெரிவித்தார். திருக்குர்ஆன் ஓதுதல், சிறப்புரை ஆகியவற்றைத் தொடர்ந்து மாணவர்களுக்கு வகஃப் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

ஜாமியா சூலியா வகஃப் உதவித் தொகை கல்லூரி, பல்கலைக் கழக உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு, ஆண்டுதோறும் நாகூர் நாயகர் கந்தூரி விழா கொண்டாட்டத்தின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது.

முயிஸ் நிர்வகித்து வரும் ஜாமியா சூலியா வகஃப் மூலம் இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. வகஃப் அறக்கட்டளையிலிருந்து நாகூர் தர்கா ஆண்டுதோறும் ஓரளவு தொகையைப் பெற்று வருகிறது.

கல்வி உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டும். பிறகு, அவர்கள் நிர்வாகத்தினரைச் சந்தித்து உரையாடிய பிறகே தேர்வு செய்யப்படுவார்கள். மூன்று ஆண்டுகளாக இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 17 மாணவர்கள் உதவித் தொகையைப் பெற்றுக்கொண்டனர்.

பாசிர் ரிஸ்-பொங்கோல் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஜைனல் சபாரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர், உதவித்தொகை பெற தேர்ந்தெடுக்கப்பட்ட 17 மாணவர்களுக்கு, உதவித்தொகையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சுமார் 400 பேர் கலந்துகொண்டனர்.

